5th November 1958]

SRI N. R. THIAGARAJAN : இதுபோன்ற வளைவுகள் பல்வேறு இடங்களில் இருப்பதனால் விபத்துக்கள் உண்டாகின்றன. உசிலம்பட்டி கண்மாயில் நான் சென்னைக்கு வரும்போழுது இது போன்ற வளைவில் ஒரு விபத்து ஏற்பட்டதைப் பார்த்தேன். தென்னூறகாடு, தஞ்சை எல்லைகள் சந்திக்கும் இடத்தில் கூட ஒரு விபத்தை நேரில் கண்டிருக்கிறேன். ஆகவே, இந்த மாதிரி வளைவுகளை நிமிர்த்துவதற்கு வேண்டிய ஏற்பாடு களை அரசாங்கம் செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது எங்கெல்லாம் வளைவு கள் இருக்கின்றனவோ அந்த வளைவுகளை நிமிர்த்தி பஸ்கள் போவதற்குச் சௌகரியமாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. எதை முன்னதாக எடுத்துக்கொண்டு செய்ய வேண்டுமோ அதைச் செய்து வருகிறோம்.

SRI A. V. P. ASAITHAMBI : சென்னை நகரிலே தினசரி இந்த கார் விபத்துக்கள் நடப்பதினாலே, பல தெருக்கள் சந்திக்கிற ஒவ்வொரு இடத்திலும் "Stop and go" என்ற அறிவிப்புப் பலகையைப் போட்டால் இந்த விபத்துகளை ஓரளவுக்கு தடுக்க முடியுமா ?

MR. SPEAKER : இதற்கு கனம் அங்கத்தினர் தனிக்கேள்வி போட வேண்டும்.

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது சில இடங்களில் போட்டிருக்கிறோம். எழுத்து மூலமாகக் கொடுத்தால் இதைப்பற்றி விசாரிக்க முடியும்.

Building for Fisheries School in Vedaranyam Panchaayt Area

* 890 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

வேதாரண்யம் பஞ்சாயத்தைச் சேர்ந்த ஆறு கட்டித்துறை மீனவர்கள் பள்ளி புயலில் சமாளிக்கத் தக்க கட்டிடம் கட்டித்தரப் கோரியிருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes—The request is under the consideration of the Government.

SRI A. VEDARATHNAM : இந்த கிராமம் கடற்கரை ஓரத்தில் இருப்பதனால், சமீபத்தில் ஏற்பட்ட புயலில் 20 அடி கடல் தண்ணீரில் மூழ்கிப்போன கிராமம். அந்தப் பள்ளிக்கூடத்திற்கு "காண்டிரிபியூஷன்" கேட்கப்பட்டிருக்கிறது. ரொம்ப நாட்களாக பள்ளிக்கூடம் இல்லாததினால் அங்கேயுள்ள குழந்தைகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இதை உடனடியாக எடுத்து வேலை செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கலெக்டர் அவர்களிடமிருந்து ஒரு ரிப்போர்ட் கேட்கப்பட்டிருக்கிறது. வந்தவுடனே முடிவு செய்யப்படும்.

Petition by Kalathur village munsif

* 891 *Q.*—SRI K. ANBAZHAGAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

களத்தூர் கிராம முனிசிப் கொடுத்த ஒரு மனுவை சாக்கோட்டை சப் இன்ஸ்பெக்டர் ஏற்க மறுத்தார் என்பது உண்மையா ? அந்த மனுவை ஏற்காததால் கிராம முனிசீப், வரி வசூலிக்க இயலாது போனது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The answer is in the negative.